ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகள் சட்டபூர்வமாக அகற்றப்பட்டு, அந்த ரெட்டை ஏரியை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியின் ஜீவாதார அணையான பேச்சிப்பாறை அணை தூர்வாரப்படும் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் முன்பு சொல்லியிருந்தார். அந்த அணையினால் கன்னியாகுமரியினுடைய நீர்வளம் காக்கப்படுகிறது. அணையிலிருந்து பல டன் எடையுள்ள மணல் எடுக்கமுடியும். ஆகவே, மக்களுடைய தேவையறிந்து, அந்த அணையைத் தூர் வாரித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூர் வாரப்பட வேண்டிய அணைகளின் பட்டியலில் பேச்சிப்பாறை அணையும் இடம்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான உத்தரவினைப் பெற்று, பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

மின்மாற்றி

***32875—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடை பகர்வாரா—

[2014 ஜூலை 16

திருமயம் தொகுதி, தாஞ்சூர் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, தாஞ்சூர் கிராமத்தில் உள்ள 100 KVA/11 KV மின்மாற்றிகளில் 10 மின்மாற்றிகள் இயக்கத்தில் உள்ளன. இவற்றுடன் மேலும் ஒரு புதிய 100 KVA/ 11 KV மின்மாற்றி நிறுவப்பட்டு, 6-6-2013 அன்று மின்னூட்டம் செய்யப்பட்டது. தற்போது அந்தக் கிராமத்திற்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பெருகி வரும் மின்பளுவைக் கருத்தில் கொண்டு, மேலும் ஒரு புதிய 100 KVA/ 11 KV மின்மாற்றி அமைப்பதற்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் இந்த வாரத்திற்குள்ளே முடிக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழும் தமிழருக்கு ஒளியாக, ஒன்றரைக் கோடி தொண்டர்களுக்கு விடியலாக, நாங்கள் பெற்ற தவமே எங்கள் அம்மா! நற்றமிழ் பூமிக்குக் கிடைத்திட்ட வரமே எங்கள் அம்மா! வாடுகின்ற ஏழைக்கும், வருங்கால தலைமுறைக்கும் பூரண ஒளியேற்றும் புன்னகையே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) புலவர்கள் போற்றிப் பாடும் புறநானூற்றுக் காவியமே, தீயோரைத் தூரத்த வந்த திராவிடத்து பேரொளியே, திசையெட்டும் வணங்குகிற தெய்வாம்ச வடிவொளியே எங்கள் அம்மா! தியானமே உருவான திருமந்திரமே, திருவரங்கம் தந்திட்ட மருத இலையே, எங்கள் தொகுதிக்கு எண்ணிலா மின் திட்டங்கள் தந்து ஏற்றம் தந்த தாயே, அம்மா உங்கள் மலர்ப் பாதம் வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, தாஞ்சூர் கிராமத்திற்குப் புதிய மின்மாற்றி அமைத்து, கும்பிட்ட கரம் விலகும் முன்பே கோரிக்கையினை நிறைவேற்றித் தந்த, மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை புதிய மின்மாற்றிகள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது என்பதையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பது குறித்த விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 9 புதிய துணை மின் நிலையங்களும், இருக்கின்ற துணை மின் நிலையங்களை தரம் உயர்த்தவும் திட்டமிட்டு, அதிலே 4 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 துணை மின் நிலையப் பணிகள் இந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாக, அதாவது இந்த நிதியாண்டு மற்றும் அடுத்த நிதியாண்டிற்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதில் புதுக்கோட்டை அர்பன் 110/22 KV புதியது, மலையூர் 110/22 KV புதியது நிறுவப்பட்டுவிட்டது. இச்சாடி 110/22/11 KV புதியது, வாத்தகுறிச்சி 110/22 KV புதியது, அம்மாசத்திரம் 110/22/11 KV புதியது, மற்றும் கீரமங்கலம் 33/11 KV, 110/11 KV நிறுவப்பட்டுவிட்டது. கொடிக்குளம் 33/11 KV, 110/33/11 KV நிறுவப்பட்டுவிட்டது. கந்தர்வகோட்டை 110/11 KV

நிறுவப்படவேண்டும். அறந்தாங்கி அரசன் 33/11 KV புதியது நிறுவப்பட்டுள்ளது. ஆகவே, 9 துணை மின் நிலையங்களில் 4 முடிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே மீதம் இருப்பவை வருகின்ற 2 நிதியாண்டுகளுக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மின்மாற்றிகள் அளவையும் கேட்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஒட்டுமொத்தமாக மின் உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், அதற்கு இணையாக மின் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டுமென்பதற்காகவும், உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை அனைவருக்கும் தடையில்லாமல் எடுத்துச் சென்று விநியோகிக்க வேண்டுமென்பதற்காகவும், இப்போது புயல் வேகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தவகையிலே, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இப்போது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புதிய மின்மாற்றிகள் வாங்குவதற்கு பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 100 கே.வி.ஏ/11 கே.வி/433 வோல்ட் மின்மாற்றிகள் ஏறத்தாழ 15,962 வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதிலே சென்ற நிதியாண்டில் ஏறத்தாழ 7,259 மின்மாற்றிகளும், இந்த நிதியாண்டில் இதுவரை 6,051 மின்மாற்றிகளும் மொத்தமாக நிறுவப்பட்டிருக்கின்றன. 100 கே.வி.ஏ/11 கே.வி. மின்மாற்றிகள் 15,962; 250 கே.வி.ஏ/11 கே.வி. மின்மாற்றிகள் 6,250; 500 கே.வி.ஏ/11 கே.வி. மின்மாற்றிகள் 1,250; 100 கே.வி.ஏ/22 கே.வி. மின்மாற்றிகள் 2,875; 200 கே.வி.ஏ/22 கே.வி. மின்மாற்றிகள் 2,900; 500 கே.வி.ஏ/22 கே.வி. மின்மாற்றிகள் 382; என இந்த அளவிற்கு திட்டமிடப்பட்டு, ஆக மொத்தம் 29,619 மின்மாற்றிகள் வாங்குவதற்கு சென்றஆண்டு திட்டமிடப்பட்டது. இன்னும் 26,500 மின்மாற்றிகள் மாற்றப்படவேண்டும். மற்ற பணிகள் எல்லாம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

அதேபோல, மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கூடுதலான எண்ணிக்கையில் மின்மாற்றிகள் நிறுவப்படுகின்றன. அங்கு அடிக்கடி மின்மாற்றிகள் பழுதடைகின்ற காரணத்தினால், கூடுதலாக மின்மாற்றிகள் நிறுவப்படவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதற்கான காரணம்

குறித்து நான் ஏற்கெனவே ஒருமுறை சொல்லி இருக்கின்றேன். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மும்முனை மின்சாரம் வழங்குகின்ற நேரத்தைத் தவிர, இருமுனை மின்சாரம் வழங்குகின்ற நேரங்களில் விவசாயிகள் புதிய Capacitor-ஐப் பொருத்தி, மின்சாரத்தை உறிஞ்சி விடுகிறார்கள். ஆகவேதான், ஒரேநேரத்தில் விவசாயப் பணிகளுக்கும், வீட்டு உபயோகப் பணிகளுக்கும் மின்சாரம் கூடுதலாக உறிஞ்சப்படுகிறபோது, மின் கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் பழுதாகிவிடுகின்றன. ஆகவே இதுகுறித்து நம்மைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். மும்முனை மின்சாரம் வழங்கப்படுகின்ற நேரத்திலே மட்டும் மும்முனை மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும். இருமுனை மின்சாரத்தை வழங்குகின்ற நேரத்தில், Transformer-ல் அவர்களே சொந்தமாக Capacitor-ஐப் பொருத்தி, மும்முனை மின்சாரமாக மாற்றிக்கொள்கிற பணியை நிறுத்தினால்தான், மின்கட்டமைப்புப் பணிகள் நிறைவுபெறும். ஆகவேதான், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கூடுதலாக மின்மாற்றிகள் தேவைப்படுகின்றன. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. பொது மக்களிடம் இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குத் தேவைப்படுகின்ற மின்கட்டமைப்பு வசதிகள், மின்மாற்றிகள், துணை மின் நிலையங்கள் அனைத்தையும் தேவைக்கேற்ப, தேவையான நேரத்திலே உடனடியாக வழங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தேவையான மின்மாற்றியைக் கொடுத்தமைக்கும், துணை மின் நிலையங்களைக் கொடுத்தமைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.